★
REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

2020 டிசம்பர் 5 சனிக்கிழமை

வரு. 88 இல. 289 | December 05,Saturday, 2020 | 16பக்கங்கள் | 30/-

## சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடத்தில் மஹா சத்ரு சம்ஹார ஹோமம்



சபரிமலை ஸ்ரீசாஸ்தா பீடத்தின் 20வது நாள் மகர ஜோதிப் பெருவிழாவில் இன்று மாலை 5 மணி முதல் விஷேட திரவ்ய அபிஷேகம், மஹா சங்காபிஷேகம், பதினெட்டாம் படி பூஜை வழிபாடுகளுடன் சர்வதேச இந்து மத குருபீடாதிபதி, சபரிமலைக் குரு முதல்வர் ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ 06

## தனியார் மருத்துவமனைகளில் கொவிட் 19 நோய்க்கு சிகிச்சை

### இராணுவத் தளபதியுடன் மருத்துவ நிபுணர்கள் ஆராய்வு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்கள் விரும்பினால் அவர்களுக்கு தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுக்கொடுப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு மருத்துவ நிபுணர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கொரோனா வைரஸ் கட்டுப்பாடு தொடர்பான தேசிய செயலகத்தின் தலைவர் இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கும் மருத்துவ நிபுணர்களுக்கு மிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போதே 06

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக

## ஆளுந்தரப்பு தமிழ் உறுப்பினர்கள் இன்று நீதியமைச்சரை சந்தித்து பேச முடிவு

### SLPP ஊடக சந்திப்பில் அங்கஜன், வியாழேந்திரன் கூட்டாக தெரிவிப்பு

**ஷம்ஸ் பாஹிம்**

நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக ஆளும் தரப்பிலுள்ள தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்று நீதி அமைச்சர் அலி சப்ரியை சந்தித்து பேச உள்ளனர்.

தமிழ் கைதிகளின் விடுதலை தொடர்பாக பொறிமுறையொன்றை அமைக்குமாறு அமைச்சரை கோரவுள்ளதாக குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன் மற்றும் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் ஆகியோர் தெரிவித்தனர்.




பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக மாநாட்டில் இவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

இங்கு உரையாற்றிய குழுக்களின் 06

## ஆனையிறவு உப்பளம், பரந்தன் தொழிற்சாலைகள் விரைவில் ஆரம்பம்

# புலம்பெயர் ... ழிலதிபர்கள் நாட்டில் முத ... வதற்கு தயார்




### சிறிதரன் எம்.பியின் கோரிக்கைக்கு அமைசசர வமல சாதகமான பதல

**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிசாந்தன்**

ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபனத்தை சுவீகரிக்க அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது. விரைவில் அது சார்ந்த அபிவிருத்தி பணிகளை உப்புக் கூட்டுத்தாபனத்தின் கீழ் ஆரம்பிக்க இருக்கிறோம். வாழைச்சேனை பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஒட்டுசுட்டான் பணி கொரோனாவினால் பிற்போடப்பட்டது. பரந்தன் இரசாயன கைத்தொழில் பேட்டை ஆரம்பிக்கப்படும் என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுக்கள் மீதான குழு நிலை விவாதத்தில் எஸ்.ஸ்ரீதரனின் கேள்விக்கு பதிளிக்கும் போதே இவ்வாறு கூறினார்.

புலம் பெயர் நாடுகளிலுள்ள தமிழர்களும் தொழிலதிபர்களும் இங்கு வந்து முதலீடு செய்யத் தயாராக

அச்சத்தை போக்குவது அரசாங்கத்தின் கடமை



எவ்விதமான அச்சமும் கொள்ளத் தேவையில்லை



இருக்கிறார்கள். அவர்களுக்கான நம்பிக்கை குறைவாக உள்ளதால் அவர்களை கவர்ந்து உள்ளீர்க்கும் வகையில் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டுமென யாழ். மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஸ்ரீதரன் மேற்கண்ட கோரிக்கையை முன்வைத்தார்.

வடக்கில் மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளை மீள ஆரம்பிக்குமாறும் கைத்தொழில் வலயமொன்றை உருவாக்க வேண்டுமெனவும் அவர் கோரினார்.

வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுக்கள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலே அவர் இதனை தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய ஸ்ரீதரன் எம்.பி,

4,000 பேர் வேலை செய்த வாழைச்சேனை காகிதத் 06

## புனர்வாழ்வளிக்கப்பட்டவர்களை இலக்கு வைத்து வெளிநாட்டிலிருந்து பணம்

### தவறான செயற்பாடுகள் குறித்து இராணுவத் தளபதி கருத்து

புனர்வாழ்வளிக்கப்பட்டவர்கள் மற்றும் பொருளாதார சிக்கலில் இருப்பவர்களை இலக்கு வைத்து வெளிநாடுகளில் இருந்து பணம் அனுப்பப்படுவதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.



கிளைமோர் குண்டு ஒன்றினை பஸ்ஸில் எடுத்துச் சென்ற சம்பவம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

இந்த குண்டு புதிதாக தயாரிக்கப்பட்டது இல்லை. மிகவும் பழமை வாய்ந்தது. இந்த நாட்டில் தீவிரவாதிகளுடன் நேரடி தொடர்பில் இருந்த சுமார் 12,000 பேர் புனர்வாழ்வளிக்கப்பட்ட நிலையில் சமூகத்தில் இருக்கின்றனர்.

இவ்வாறானவர்கள் மற்றும் பொருளாதார சிக்கலில் உள்ளவர்களை 06

## கடந்த ஆட்சி வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுக்க தவறிவிட்டது

### இன்று சனத்தொகையில் 20 சதவீதம் வேலையற்றோர்

**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**

நாட்டில் வேலைவாய்ப்புகள் இல்லாத இளைஞர்களின் எண்ணிக்கை சனத்தொகையில் 20 வீதமாகும் என இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



பாராளுமன்றத்தில் நேற்று கைத்தொழில் வர்த்தக அமைச்சுகள் மற்றும் இராஜாங்க அமைச்சுகள் மீதான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

கடந்த ஆட்சி வேலைவாய்ப்புகளை உருவாக்கிக்கொடுக்க தவறிவிட்டது. இன்று அது மிகப் பெரிய சவாலாக உள்ளது. இன்று வேலைவாய்ப்பு இல்லாத இளைஞர்களின் எண்ணிக்கை 20 வீதமாகும். இது தற்காலிக அரசியல் 06

## சிதம்பரம் நடராஜர் கோயில் வெள்ளத்தில்



தமிழகத்தின் சிதம்பரத்தில் கொட்டித் தீர்த்த கன மழையால் வரலாற்று புகழ்பெற்ற சிதம்பரம் நடராஜர் கோயில் உள்ளே மழைநீர் தேங்கியுள்ளது. கோயிலுக்கு வெளியே மழைநீரால் வடிகால்கள் சூழ்ந்து போனதால் கோயில் உள்ளே மழைநீர் 06



## வடக்கில் மீள்குடியேறிய மக்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு

### நேரில் வந்து ஆராய்வதாக வனஜீவராசிகள் அமைச்சர் உறுதி

**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிசாந்தன்**

வடக்கில் மீள்குடியேறிய மக்



பதிலளித்த அமைச்சர் சீ.பி ரத்னாயக்க மேலும் கூறியதாவது,

2012 ஆம் ஆண்டின் பின்னர்

## வெள்ளை மாளிகையின் உயர் பதவிக்கு யாழ். பெண்

### உப ஜனாதிபதியின் உள்நாட்டு கொள்கை ஆலோசகர்

அமெரிக்காவின் உப ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள

